**செய்தி வெளியீடு** **நாள்: 13 .02.2024**

**மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் அவர்கள் மற்ற உறுப்பினர்கள் கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திற்கு வந்து முழுமையாக சுற்றி பார்த்துவிட்டால், நிச்சயம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை எதிர்க் கட்சித் தலைவரே புகழ கூடிய அளவிற்கு, கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் அமைந்திருக்கிறது.**

**சட்டமன்ற பேரவையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்**

********

இன்று (13.02.2024) நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்ற பேரவைக் கூட்டத்தொடரில், கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் தொடர்பாக மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்களின் பதிலுரை :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை பொறுத்தளவில், திறப்பதற்கு முன்பாக ஒரு விமர்சனமும், திறந்ததற்கு பின்பாக ஒரு விமர்சனமும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சுருக்கமாக 2 நிமிடத்தில் அவருடைய வரலாற்றைக் கூற இந்த அவையில் நான் கடமைப்பட்டுள்ளேன். 2013 ஆம் ஆண்டு இந்த பேரவையில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை அன்றைய ஆட்சி அறிவித்தது. 2013 ஆண்டு அறிவிக்கப்பட்ட அந்த திட்டம், 2018 ஆண்டு டெண்டர் கோரப்பட்டது. 2019 ஆம் ஆண்டு ஒப்பந்தபுள்ளி செய்யப்பட்டு, பணி தொடங்கப்பட்டது. அந்த ஒப்பந்தம் 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிய வேண்டும் என்பது ஒப்பந்தத்தின் உரிய கால அளவு. ஆட்சி மாற்றத்திற்கு பிறகு திராவிட மாடல் ஆட்சி **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** தலைமையில் ஏற்பட்ட பிறகு கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தையுடைய ஆய்வு கூட்டத்தை **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** தலைமையிலே. அன்றைக்கு அந்த துறை அமைச்சராக இருந்த அருமை அண்ணன் திரு.முத்துசாமி அவர்கள் தலைமையில் தொடர் நடவடிக்கையாக ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டு, நிறுத்தப்பட்ட அந்த திட்ட பணிகளை எந்த ஆட்சியில் கொண்டு வரப்பட்டது என்பது முக்கியமல்ல. தொலைநோக்கு பார்வையோடு இருப்பதால் அதை விரைந்து முடிக்க வேண்டும் என்று **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** உத்தரவிட்டார்.

இந்த திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகு இரண்டறை ஆண்டு முந்தைய ஆட்சிதான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது அறிவிக்கப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டதோடு சரி, மாண்புமிகு முதலமைச்சர் தான் அதை அடிக்கல் நாட்டி இருக்கிறார். அந்த கல்வெட்டையும் நாங்கள் அங்கிருந்து எடுக்கவில்லை. ஆட்சி மாறியும் அந்த கல்வெட்டை அங்கே வைத்திருக்கின்றோம். ஒருமுறை கூட

அந்த பணிமனைக்கு சென்று ஆய்வு மேற்கொள்ளவில்லை. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு பார்த்தால் நானாக இருந்தாலும் சரி, அந்த துறை அமைச்சர் முந்தைய அமைச்சராக இருந்தாலும் சரி, கிட்டத்தட்ட 20-க்கும் மேற்பட்ட முறை அந்த பணிமனையிலேயே ஆய்வினை மேற்கொண்டிருக்கின்றோம். இது ஒரு புறம். நேற்று கூட நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் பேட்டியிலேயே சொல்லுகின்ற பொழுது போதிய வசதிகள் இல்லை என்று குறிப்பிட்டு இருந்தார். நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கூட வாருங்கள், அழைத்துச் சென்ற காட்டலாம் என்றார். இதில் ஒரு சிறிய ஒப்பீட்டை நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கனவே கோயம்பேடுயிலேயே இயங்கிக்கொண்டிருக்கின்ற பேருந்து நிலையத்தை உடைய மொத்த பரப்பளவு 33 ஏக்கர், புதிதாக கட்டப்பட்டு இருக்கின்ற கிளாம்பாக்கம் பேருந்து முனைய பரப்பளவு 86 ஏக்கர். இந்த 86 ஏக்கரில் முந்தைய அரசு சரியான திட்டமிடல் இல்லை என்ற காரணத்தால் பல்வேறு பணிகளை மேற்கொள்ள தவறிவிட்டது. அப்படி அவர்கள் தவறிய பணி கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் அளவிற்கு இன்றைக்கு அந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் செயல்படுத்தி காட்டி இருக்கிறோம். கோயம்பேடு பேருந்து நிலையம் என்பது கடந்த 2002 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. அந்த பேருந்து நிலையம் திறக்கப்பட்ட பிறகு 7 ஆண்டுகள் வரை நாம் சென்னைவாசிகள் என்பதால் நன்றாக அறிந்து இருப்போம். பாரிமுனை, சென்ட்ரல், எழும்பூர் போன்ற பகுதிகளில் ஆம்னி பேருந்துகள் இயக்கத்தால் போக்குவரத்து சந்தித்திருந்தது. மக்கள் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு இருந்தார்கள். ஆனால் நம்முடைய கோயம்பேடு பேருந்து நிலையம் 2002 ஆண்டு திறக்கப்பட்டாலும், 2009 ஆண்டு தான் ஆம்னி பேருந்துகள் கோயம்பேடு நிலையத்திற்கு செல்லும் நிலை இருந்தது. குறிப்பிட்டு சொல்லவேண்டும் என்றால் 7 ஆண்டுகள் கழித்து தான் கோயம்பேடு பேருந்து நிலையம் திறக்கப்பட்ட பிறகு மக்கள் பயன்பாட்டுக்கு வந்தது. ஆனால் இன்றைய திராவிட மாடல் அரசு.

கடந்த 2023 டிசம்பர் மாதம் 30 ந்தேதி இந்த பேருந்து நிலையம் திறக்கப்பட்டதிலிருந்து இன்றைய தினம் வரையில் கணக்கில் வைத்தால் 45 நாட்களாகின்றன. இந்த 45 நாட்களில் 2450 பேருந்துகள் தினந்தோறும் இயக்கப்படுகின்றன. ஒரு நிர்வாக திறன் உடைய ஆட்சி திராவிடல் மாடல் ஆட்சி என்பததை குறிப்பிட்டு கூற நான் கடமைபட்டிருக்கின்றேன். கடந்த (10.02.2024) சனிக்கிழமை அன்று ஆய்வுக்கு சென்றோம் அன்றை தினம் மற்றும் பயணிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று பார்த்தால் 1,07,000ஆம் பேர் அன்றைய ஒரு தினத்தில் மட்டும் பயணித்து இருக்கிறார்கள். நம்முடைய கோயம்பேடு நிலையத்தில் பார்த்தால் பேருந்து ஓட்டுநர்கள் அன்றைக்கு 2002 ஆம் ஆண்டு வந்த தலைப்பு செய்தியை சுட்டிகாட்டுகிறேன். பேருந்து ஓட்டுநர்களுக்கு படுக்க இடம் இல்லாமல், பேருந்து அடியிலே படுத்து உரங்குகிறார்கள் என்ற செய்திகளை எல்லாம் நான் கையிலே வைத்து கொண்டுருக்கின்றேன். எதிர்கட்சி தலைவருக்கும் நான் தருவதற்கு தயாராக இருக்கின்றேன். ஆனால் இன்றைய நிலை அப்படி இல்லை 3 இடங்களில் 300 க்கும் மேற்பட்டவர்கள் தங்குவதற்கு உண்டான எற்பாடுகளை இந்த கிளாம்பாக்கம் பேருந்து

நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது. 3 உணவகங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது. மருத்துவமனை ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது. கடைகள் 47 செயல்பாட்டில் இருக்கின்றது.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு அங்கு புதிய பூங்கா ரூ.6.00 கோடி செலவில் அமைக்கப்பட்டு இருக்கின்றன. காலநிலை பூங்கா ரூ.11.00 கோடி செலவில் 16 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டிருக்கின்றன. மழைக்காலத்தில் சிறிய மழைக்கே பெரிய தண்ணீர் தேங்கி நிற்கின்ற சூழலை அறிந்து 1700 மீட்டர் அளவிற்கு சுமார் ரூ.11.00 கோடி செலவில் மழை நீர் கால்வாய் அமைக்கப்பட்டு இருக்கின்றன. நுழைவாயில் கூட இல்லாத நிலையில் இருந்த அந்த பேருந்து நிலையத்திற்கு. சுமார் ரூ.6.00 கோடி செலவில் நுழைவு வாயில் அமைக்கப்பட்டு இருக்கின்றன. போக்குவரத்திற்காக மாற்றுப்பாதைக்காக சுமார் போலீஸ் அகடாமி சாலை, நெடுமஞ்சேரி சாலை ஆகிய சாலைகளில் 8 கிலோமீட்டர் அளவிற்கு நம்முடைய வனத்துறை உரிய அனுமதியோடு புதிய தார் சாலைகள் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு டெண்டர் கோரப்பட்டு அந்த பணிகள் நிறைவுற்று இருக்கின்றன. அதேபோல், புதிதாக நடைமேம்பாலம் சுமார் ரூ.60.00 கோடி அளவிற்கு இன்றைக்கு டெண்டர் கோரப்பட்டு இருக்கின்றன. அதே போல் கிளாம்பாக்கத்துக்கு ஒரு ரயில் நிலையம் அமைப்பதற்கு. ரூபாய் 20.00 கோடி அளவில் ரயில்வே துறைக்கு ஒப்படைக்கப்பட்டு, இன்றைக்கு அந்த பணிகள் துவக்கப்பட்டு. 6 மாத காலத்தில் நிறைவு பெற இருக்கின்றன. நிரந்தர தீர்வாக மெட்ரோ ரயில் அமைப்பதற்கு உண்டான திட்டங்களையும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** உத்தரவிட்டார்.

அதன்பேரில், இன்றைக்கு அந்த பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பிட்டு கூற வேண்டுமென்றால் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை பொறுத்தளவில் எதிர்கட்சி தலைவர் உடைய நேற்றைய குற்றச்சாட்டுக்கு பதில் சொல்வது என்றால், இதுவரையில் பயணிகள் யாரும் கழிப்பறை இல்லை என்று புகார் சொல்லவில்லை. குடிநீர் வசதி இல்லை என்று புகார் சொல்லவில்லை, உணவு இல்லை என்று புகார் சொல்லவில்லை, குழந்தைகளுக்கு பால் இல்லை என்று புகார் சொல்லவில்லை. இந்த பேருந்து நிலையத்தை பொறுத்தளவில் இரவு நேரத்தில் ஏற்படுகின்ற 12 மணிக்கு மேல் நாலு மணிக்குள்ளாக வருகின்ற அந்த பயணிகளுக்கு உண்டான பேருந்து வசதி இல்லையென்பதால் சில ஊடகங்களால் திட்டமிட்டு பரப்பப்படுகின்ற பிரச்சனையே தவிர கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை பொறுத்தளவில் 100 சதவீத பயன்பாட்டுக்கு இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

அதோடு மட்டுமல்லாமல், கோயம்பேட்டில் இயக்கப்பட்ட பேருந்து நிலையத்தில் பார்த்தால் பயணிகளுக்கு உண்டான சுமைகளை கொண்டு செல்வதற்கு அன்றைக்கு டிராலிகள் இல்லை. இன்றைக்கு டிராலி வசதி இந்த பேருந்து முனையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் நடக்க முடியாதவர்கள் வயது முதிர்ந்தவர்களுக்கு பஸ்சை பிடிக்கப்பதற்கு சற்று 200 மீட்டர் தூரம் இருப்பதை அறிந்து, உடனடியாக 12 பேட்டரி கார்கள் அங்கே பொருத்தப்பட்டு இருக்கின்றன. நடை

மேம்பாலம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மின் தூக்கி வசதி பொருத்தப்பட்ட அத்தனையும் இருந்தும் தூங்குபவரை எழுப்பலாம். தூங்குவது போல நடிப்பவர்களை எழுப்ப முடியாது. ஒரே ஒரு உறுத்தல் இந்த கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தை பொறுத்தளவில் எதிர்கட்சி உடைய சாடலுக்கு என்ன என்று தான் நினைத்து நினைத்து பார்த்தேன். ஆசியா கண்டத்திலேயே இவ்வளவு சிறப்பு வாய்ந்த பேருந்து நிலையம் அனைத்து நவீன வசதிகளோடு இருக்கின்ற பேருந்து நிலையம் நம்முடைய விமான நிலையம் கூட திறக்கப்படுகின்றது. ஆனால் ஆறு மாதம் ஒரு ஆண்டுகள் கழித்துத்தான் அந்த விமான நிலைய தொடங்க செயல்பாடுகள் செயல்பாட்டுக்கு வருகின்றன.

அண்மையில் கூட மாண்புமிகு பிரதமர் அவர்கள் திருச்சியிலே விமான நிலையத்தை திறந்து வைத்தார். இதுவரையில் விமான நிலையம் முழு பயன்பாட்டிற்கு வரவில்லை. ஆனால் நம்முடைய திராவிட மாடல் ஆட்சியிலேயே **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** சொல்வதை செய்வார் செய்வதை சொல்வார் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இன்றைக்கு கிளாம்பாக்கம் பேருந்து முனையம் அமைந்திருக்கின்றது. ஒட்டுமொத்த உறுத்தலை கணக்கிட்டுப் பார்த்தோம். என்ன தான் இருக்கும்? இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த ஒரு பேருந்து நிலையம் முதல் கட்டமாக துவக்கப்படுகின்ற போது சிறு சிறு பிரச்சனைகள் இருப்பது இயல்பு. காலப்போக்கில் அதையெல்லாம் அறிந்து சரி செய்து விடலாம். ஆனால் இப்படி தொடர்ந்து புகார் கூறுகிறார் என்று சிந்தித்து பார்த்த பொழுது.

என்னுடைய சிந்தைக்கு வருவதெல்லாம் **தலைவர் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்** என்று பெயர் வைத்ததால் தான் இந்த அவதூறுகளை தொடர்ந்து, மனமில்லாதவர்கள் பரப்பி வருகிறார்கள் என்பதை நான் இங்கே கோடிட்டுக் காட்டி, கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் இன்னும் தேவைப்படுகின்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் நிறைவு செய்கின்ற வகையில் பல்வேறு மாற்றங்களை இந்த 45 நாட்களிலே கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் கொண்டு வந்திருக்கின்றோம் வேண்டும் என்றால் சட்டமன்றத்திலே இருக்கின்ற அனைத்து கட்சியை சார்ந்த உறுப் னர்களும் வாருங்கள் நாங்கள் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திற்கு மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் அவர்கள் உட்பட அனைவரையும் அழைத்து செல்கின்றோம் மேலும் நீங்கள் என்ன என்ன தேவை என்று கூறுங்கள் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** கவனத்துக்கு கொண்டு சென்று முழுமையாக உங்களுடைய தேவைகளையும் நிறைவேற்ற இந்த அரசு தயாராக இருக்கிறது. கிளாம்பாக்கம் பேருந்து முனையம் சிறு சிறு தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்து தொலைநோக்கு பார்வையோடு சென்னை மக்களுடைய நெரிசலை குறைப்பதற்கு அது பயன்பாட்டிற்கு வருவதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கின்றேன் மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே.

மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே அவசரப்பட்டு இந்த பேருந்து நிலையத்தை திறந்து விட்டதாக சொல்லுகிறார். அவர்கள் செய்யத் தவறிய காரியத்தை இந்த ஆட்சி செய்து இருக்கின்றது. அவருடைய ஒப்பந்த காலம் என்பது 2021ம் ஆண்டு மார்ச் 13 ந்தேதியோடு அந்த பணியினுடைய பணி நிறைவு ஒப்பந்தம் கோரப்பட்டு இருந்தது. கடந்த ஆட்சி காலத்தில் 30 சதவீத பணிகள் தான் முடித்திருந்தார்கள், மீதம் 70 சதவீத பணிகளை முடித்தவர் அல்லாமல் 100 கோடி ரூபாயை திட்டமிட்டு பயணிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தந்த அரசு, இந்த அரசு என்பதை நான் பதிவு செய்கிறேன். மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் மற்ற உறுப்பினர்கள் வந்தால் அந்த கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தை முழுமையாக சுற்றி பார்த்துவிட்டால் நிச்சயம் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை** எதிர்க் கட்சித் தலைவரே புகழ கூடிய அளவிற்கு, கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் அமைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் அவர்களுக் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வெளியீடு** : **மக்கள் தொடர்பு அலுவலர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**